திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் குறைவாக இருப்பதால் எல்.ஐ.எம். டாக்டர்களை நியமனம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த எல்.ஐ.எம். டாக்டர்களை கிராமங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கெனவே சில டிஸ்பென்சரிகளில் எல்.ஐ.எம். டாக்டர்கள் தான் இருக்கிறார்கள்.

கிராம மருத்துவ நிலையங்கள் (செய்யாறு வட்டம்)

*721 கேள்வி.—**திரு. புலவர் கா. கோவிந்தன்** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராம மருத்துவ நிலையங்கள் (**Rural Dispensaries**) அமைப்பதிலும் டாக்டர்களை நியமிப்பதிலும் சர்க்காரின் கொள்கை யாது ?

(இ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டத்தில் எத்தனை நிலையங்களும், எத்தனை டாக்டர்களும் இருக்கவேண்டும் ? இப்போதைய நிலை யாது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No new dispensary should be opened by a Panchayat Union Council within a radious of five miles from an existing dispensary. Besides practitioners of modern medicine, practitioners of indigenous medicine can be appointed by Panchayat Union Councils in rural dispensaries in the following order of preference :

(1) **G.C.I.Ms.**

(2) **L.I.Ms.**

(3) Other ' A ' class practitioners.

(4) ' B ' class practitioners who have had training in teaching institutions recognised by the Government.

(5) ' B ' class practitioners who had the village vaidya training.

(6) ' C ' class practitioners who had been practising for 10 years and have been register by the Central Board of Indigenous Medicine.

(*b*) The number of rural dispensaries which Cheyyar taluk should have, besides other types of medical institutions, has not been assessed. The existing number is 6.

30th July 1962]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பஞ்சாயத்து யூனியன்கள் ரூரல் டிஸ்பென்சரிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று உத்தேசித்தால், அவைகள் இத்தனை டிஸ்பென்சரிகள் தான் ஆரம்பிக்க வேண்டுமென்ற நியதி உண்டா? அரசாங்க உதவி அவைகளுக்கு உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்து, தேவையை, 'அஸெஸ்' பண்ணித்தான் பஞ்சாயத்து யூனியன்கள் தனிப்பட்ட முறையில் ரூரல் டிஸ்பென்சரிகள் ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

திரு. சி. பொன்னுசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, 'இன்டர் நேஷனல் கேர் கமிட்டி' கிராம மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முன்வருகிறார்கள். அவர்கள் 'மொபைல் வான்' வசதி எல்லாம் செய்து கொடுக்க முன் வந்தால், அதை நம்முடைய சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா? கேர் கமிட்டி கேட்டுக் கொள்ளப்பட்டதா? தாங்களாகவே முன்வந்து கிராமங்களில் சேவை செய்கிறோம் என்று சொல்கிற டாக்டர்கள் இருக்கிறார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற மாதிரி, மொபைல் வான் வைத்து மருத்துவ சிகிச்சை அளிக்கும் வேலையை இன்டர் நேஷனல் ஸ்தாபனமான **W.H.O.** செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களே மூன்று அல்லது ஐந்து வருஷ காலம் அந்த மொபைல் வான்கள் வைத்து நடத்திவிட்டு, பிறகு அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கலாம் என்று அவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும் இத்தனை ஆஸ்பத்திரிகள் தான் திறக்க வேண்டும் என்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன்களில் ஆஸ்பத்திரி இருந்தால் அந்த ஆஸ்பத்திரிக்கு ஐந்து மைல் சுற்றளவுக்குள் வேறு ஒரு ஆஸ்பத்திரி திறக்கக் கூடாது என்ற முறை அனுசரிக்கப்படுகிறது.

திரு. டி. கர்ச்சா கவுடர்: கிராமப் புறங்களில் மக்கள் முன் வந்து கூட்டுறவு அடிப்படையில் சிறிய சிறிய ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த முன்வந்தால், அரசாங்கம் அவர்களுக்கு ஊக்கம் அளிக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நம் ராஜ்யத்தில் ஏற்கனவே நிறைய கூட்டுறவு இயக்கம் இருக்கிறது. மருத்துவ சிகிச்சைக்கும் கூட்டுறவு முறையில் செய்தால் அவ்வளவு நன்றாக இருக்காது என்றுதான் நான் நினைக்கிறேன்.

திரு. டி. கர்ச்சா கவுடர்: என்னுடைய ஜில்லாவிலுள்ள சேலூரில் கூட்டுறவு ஆஸ்பத்திரி இருக்கிறது. அது நன்றாக நடக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் அதை நேரில் வந்து பார்த்த பிறகாவது, கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கிராமப் புறங்களில் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த முயற்சிப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. அ. ராகவ ரெட்டி: ஏற்கனவே இருக்கும் ரூரல் டிஸ்பென்சரிகளே, போதுமான மருந்து சப்ளை செய்யப்படாததால் மூடப்படும் நிலையில் இருக்கின்றன. அந்த டிஸ்பென்சரிகள் ஒழுங்காக நடப்பதற்கான வகையில் சர்க்கார் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினருடைய ஆலோசனை கவனிக்கப்படும்.

கீழ்ப்பாக்கம் வைத்தியக் கல்லூரி

*730-ஒ கேள்வி.—திரு. எம். பி. வடிவேல்
திரு ந. பா. செங்கோட்டுவேலு: } கனம்
சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கீழ்ப்பாக்கத்தில் உள்ள வைத்தியக் கல்லூரியை சென்னை நகரத்திலிருந்து மாற்ற அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Yes, Sir. Considerable expansion of the present buildings of the College has to be made to satisfy the requirements of the University of Madras and the Medical Council of India. The College is at present situated in a congested area of the city. In order to facilitate the proper development of the College, it has been decided to shift it to a suitable place outside the City. The Government have not yet decided the place to which it should be shifted.

திரு. ஜே. மாதா கவுடர்: சென்னை நகரத்தில் ஸ்டான்லி மெடிகல் காலேஜும், மெட்ராஸ் மெடிகல் காலேஜும் இருக்கின்றன. இவை தவிர, மூன்றாவதாக கீழ்ப்பாக்கத்தில் உள்ள வைத்தியக் கல்லூரியையும் சென்னை நகரத்திலேயே வைத்திருக்காமல் இதை கோயமுத்தூர் ஜில்லாவிலோ அல்லது எங்களுடைய நீலகிரி ஜில்லாவிலோ வைக்கலாம் அல்லவா ? நீலகிரி ஜில்லாவில் வைத்தால், அங்கு குளு குளு என்ற சூழ்நிலையில் வைத்தியக் கல்லூரி நன்றாக இருக்கும். ஆகவே, இந்தக் கல்லூரியை சென்னை நகரிலிருந்து மாற்றி எந்த ஜில்லாவில் வைப்பது என்ற பிரச்னையை அமைச்சரவை பரிசீலனை செய்யும்போது, நீலகிரியில் இந்த வைத்தியக் கல்லூரியை வைக்கலாம் என்ற என்னுடைய யோசனையையும் கனம் அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக் கொள்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கண்டிப்பாகக் கவனிக்கப்படும்.

கனம் சபாநாயகர்: தமிழ்நாட்டில் தான் நீலகிரியும் கோயம்புத்தூரும் இருக்கின்றன.